## டிசம்பர் 2014 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள்

டிசம்பர் 2014 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு - கட்டுப்பாட்டு முறைகள் குறித்து பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் அறிக்கை.

### நெற்பயிர்

கோயம்புத்தூர், புதுக்கோட்டை, திருவள்ளூர், கன்னியாகுமாரி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் பரவலாக நெல் பயிரில் இலைச் சுருட்டுப்புழு, தண்டுப்புழு தாக்குதல் மற்றும் ஆணைக் கொம்பன் தாக்குதல் தென்படுகிறது. இலைச் சுருட்டுப்புழு, தண்டுப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த வயல்களில் விளக்குப் பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும்.

பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால், வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் (25 கிலோ/எக்டருக்கு) அல்லது கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும். பாசலோன் 35 இ.சி 1500 மில்லி / எக்டர் (அல்லது) பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 1250 மில்லி / எக்டர் அல்லது பிப்ரோனில் 80 டபின்யூ.ஜீ 62.5 கிராம் / எக்டர் என்ற விகிதத்தில் தெளிக்கவும்.

### புகையான் தாக்குதலை கட்டுப்படுத்த

- தண்ணீரை நன்கு வடிகட்டவும்.
- தழைச்சத்து (யூரியா) இடுவதை தவிர்க்கவும்.
- பைரித்ராய்டு பூச்சிக்கொல்லிகள் தெளிப்பதை தவிர்க்கவும்.
- பூச்சிகளின் தாக்குதல் அதிகமாய் தென்பட்டால் கீழ்காணும் ஏதாவது ஒரு மருந்தினைத் தெளிக்கவும்.
    - இமிடாகுளோப்ரிட் 40 மிலி
    - குளோர்பைரிபாஸ் 500 மிலி
    - பியூப்ரோபென்சின் 320 மிலி
    - அசோடிராக்டீன் 400 மிலி

நெல்லில் குலை நோய் தாக்குதல் பரவலாகக் தென்பட வாய்ப்புள்ளது. நோய்த்தாக்குதல் கண்டவுடன் ஹேக்சகோனஸால் என்ற மருந்தை 0.2% என்ற அளவில் வாரம் இருமுறை தெளிக்கவும். மேலும் சூடோமோனாஸ் புளுரசன்ஸ்ஸினை பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை 0.2% என்ற அளவில் தெளித்து மகசூலை பெருக்கவும்.

**பருத்தி**

தர்மபுரி, தேனி மற்றும் மதுரை மாவட்டத்தில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மீன் எண்ணெய் சோப் மருந்து 1 கிலோவை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். தேவைப்படின் ட்ரையசோபாஸ் 40 இ.சி 2.0 லிட்டர் / எக்டருக்கு (அல்லது) அசிபேட் 75 எஸ்.பி 1.30 கிலோ ஒரு எக்டருக்கு உபயோகிக்கவும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் புள்ளி காய்ப்புழு தாக்குதல் பருத்தியில் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த வயல்களில் விளக்கு பொறி அமைத்து (1 / ஏக்கர்) அந்திப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் குளோர்பைரிபாஸ் (20 இ.சி) 2 லிட்டர் / எக்டர் அல்லது பாசலோன் (35 இ.சி) 1.5 லிட்டர் / எக்டர் என்ற அளவில் பயிர்களில் தெளிக்கவும்.

**நிலக்கடலை**

ஈரோடு, சேலம், இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிலக்கடலையில் இலைச்சுருட்டுப்புழுவின் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த எக்கருக்கு ஒரு விளக்குப்பொறி வைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கவும். தேவைப்படின் கீழ்க்கண்ட ஏதாவது ஒரு பூச்சிக் கொல்லி மருந்தினைத் தெளிக்கவும். டைபுளுபென்சூரான் 25 டபிள்யூ.பி 400 கிராம் ஒரு எக்டருக்கு அல்லது குளோர்பைரிபாஸ் 20 இ.சி. 1250 மில்லி, ஒரு எக்டருக்கு அல்லது குயினல்பாஸ் 25 இ.சி. 1500 மில்லி ஒரு எக்டருக்குத் தெளிக்கவும்.

**கரும்பு**

ஈரோடு, சேலம், கடலூர், புதுக்கோட்டை மற்றும் திருவள்ளுர் மாவட்டங்களில் கரும்பில் இடைக்கணுப் புழு தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த டிரைக்கோகிராமா முட்டை ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 1 சி.சி. என்றளவில் நட்ட 45 நாட்கள் முதல் 15 நாட்கள் இடைவெளியில் வயல்களில் கட்ட வேண்டும்

**நெல் பயிரிடும் கடலோர மாவட்ட விவசாயிகளின் கவனத்திற்கு**

கடலோர மாவட்டங்களில் காற்றழுத்தத் தாழ்வுநிலையால் மேகமுட்டத்துடன் கூடிய வானிலையும் காற்றில் அதிக ஈரப்பதமும் 3 அல்லது 4 நாட்கள் காணப்பட்டால், நெல்பயிரில் குலைநோய் தென்பட அதிக வாய்ப்புண்டு. விவசாயிகள் உடனே 0.1 சதம்